முடிவதில்லை. பெற்றோர்களின் கட்டாயத்திலேதான் படிக்கிறார்கள். பள்ளிக்கு வருகின்றனர். சில பல இடங்களில் இந்த நிலைமை இருக்கிறது. இதையொட்டிக்கூட இது இருக்கக்கூடும். ஆனாலும், முழுவதும் ஆராய்ந்தால், அதுபற்றிய நிலைமைகள் நமக்குத் தெரியவரும்.

*118 வினா—

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : புலவர் அறிவுடைநம்பி இடத்திலே இல்லை.

Central Valuation System

* 118. Q.—THIRU K. ARIVAZHAGAN (on behalf of PULAVAR O.ARIVUDAI NAMBI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether there is any proposal with the Government to adopt the Central Valuation System in the S.S.L.C. Examination held in October and

(b) if so, when it will come into force ?

மையத் திருத்து முறை.

திரு. க. அறிவழகன் : (புலவர் ஓ. அறிவுடைநம்பி சார்பில்) : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) பள்ளி இறுதி அக்டோபர் தேர்வில் மையத் திருத்து முறையை அனுசரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(இ) ஆமெனில், அது எப்போது அமுலுக்கு வரும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இந்த "சென்ட்ரல் வேல்யுவேஷன் சிஸ்டம்" என்பதை அரசு நல்ல ஒரு அமைப்பாக ஏற்றுக் கொண்டுள்ளதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நாம் எதிர்பார்க்கும் குறைகள் எல்லாம் அதில் நீக்கப்பட்டுள்ளனவா ? வெகு சீக்கிரமாக, அவசர அவசரமாக இந்த விடைத்தாள்களுக்கெல்லாம் மார்க் போடப்படுகிறதாலே, அதைச் சரியானபடி சோதித்துப் பார்த்து மார்க் போடுவதற்கு போதிய அவகாசமில்லை என்ற புகார், மார்ச் பரிட்சை சம்பந்தமாக, அரசுக்கு வந்திருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

1972 டிசம்பர் 15]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மார்ச்சிலே நடைபெறுகின்ற தேர்வுகளைப் பொறுத்து ஒரு மைய நிலையம் ஏற்படுத்தப்பட்டு, அங்குதான் அந்த விடைத்தாள்களையெல்லாம் திருத்து கிறார்கள். இந்த முறையை இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக நடைமுறைப்படுத்தி வந்ததில் ஓரளவு நல்ல நிலைமைகள் இருக்கின்றன. எல்லாம் மகிழத்தக்க அளவுக்குத்தான் இருக்கின்றது. ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒருவருக்கு 3 மணி நேரத்திற்கு 15 விடைத்தாள்கள்தான் திருத்துவதற்குக் கொடுக்கிறோம். அதிலே இன்னும் கடினமிருக்கிறது, இன்னும் குறைக்க வேண்டுமென்று அவர்கள் தெரிவித்ததால், அதையும் யோசித்து அனுசரிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறது. அரசு. முதலாண்டுக்குப் பிறகு அடுத்த ஆண்டு அவர்களுக்கெல்லாம் கொஞ்சம் படிகள் போதாது, குறையிருக்கிறது என்று அவர்கள் தெரிவித்ததின்பேரில், அவர்கள் படிகள் கூட ஓரளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே பல இடங்களில் வைத்த அந்த நிலைமையை மாற்றி, இப்போது கூடுமான வரையில் சென்னையிலே பல்வேறு பகுதிகளிலே இரண்டு மூன்று இடங்கள், 2, 3 நகரங்களிலே மட்டும் தெரிந்தெடுக்கப்பட்டு அது ஓரளவுக்கு விரிவாக நடைபெற வசதி செய்யப்பட்டிருக்கிறது. பள்ளி இறுதி வகுப்பினுடைய தேர்வுப் பட்டியலை விரைவிலே வெளியிடக்கூட அது வாய்ப்பாக இருக்கிறது. எல்லோரும் ஒரு இடத்திற்கு வந்து 8, 10 நாட்களுக்கு ஒரு நாளைக்கு 30 தாள்கள் அதாவது காலை 15 தாள்கள் மாலை 15 தாள்கள் என்று பிரித்துக்கொடுக்கப்படுகின்றன. சில பேர் அப்போது திருத்திக் கொடுக்காவிட்டாலும், அவர்கள் திருத்தும் வரை எல்லோரும் அங்கேயே இருக்கிற அளவுக்குத்தான் இருக்கிறது. அதிலே ஏதாவது இடர்பாடு இருக்குமானால், பள்ளிக் கல்வி அகத்தினர் அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ளுவார்கள்.

அக்டோபரில் தேர்வு வைக்கக்கூடாதா என்பது அவர்கள் கேள்வி. அக்டோபரிலே மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. 1971-இலே 26 ஆயிரம் மாணவர்கள், 1970-இலே, 31,568, 1969-இல் 36,182, 1968-ல் 61,307 என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால், இந்தச் சமயத்திலே ஆசிரியர்களைக் கொண்டுவர வேண்டுமானால், அவர்கள் பள்ளிகளை விட்டு விட்டு வரவேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது. மாணவர்கள் எண்ணிக்கையும் குறைவாயிருக்கிறது. அதற்காக அவர்களை வரவழைக்க வேண்டியிருக்கிறது. இதற்காக அவர்கள் பள்ளிகளை விட்டுவிட்டு வர வேண்டும். இந்த நெருக்கடி காரணமாகத்தான் அக்டோபர் திங்களில் மைய திருத்துதல் வைக்காமல் மார்ச் திங்கள் தேர்வினை மட்டும் மத்திய இடத்திலே வைத்து, நாம் விடைத்தாள்களைத் திருத்துவதற்கான முறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தலைவரவர்களே, மத்திய திருத்தும் முறை பொதுவாக திருப்தி தரத்தக்கதாக இருக்கிறதா, என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஓரளவுக்குத் திருப்தியடையக்கூடியமுறையாகத்தான் இருக்கிறது. ஏற்கெனவே இருந்த குறைபாடுகள் இல்லாத அளவுக்கும், விரைவிலே

திருத்தப்பட்டுத் தரப்படுகின்ற அளவுக்கும் இருக்கிறது. தாள்கள் மாற்றப்படுகின்றன, கூட்டிப் போடப்படுகின்றன, ஆசிரியர்கள் அணுகப்படுகின்றனர் என்பது ஓரளவுக்கு இருந்தாலும் கூட, பரவலாகப் பேசப்படுகின்ற அளவுக்கு சூழ்நிலைகள் இருந்தன. அந்தக் குறைபாட்டிற்கு இடமே இல்லை. ஏனென்ருல், பொதுத் தேர்தல் நடக்கிறபோது, எப்படி ஓட்டுப்பெட்டிகள் எல்லாம் கொண்டுபோய் வைக்கப்பட்டு வருகிறதோ, அது போல யாருக்கு எந்தத் தொகுதிப் பெட்டி வருகிறது, என்ன ஓட்டுகள் எண்ணுகிருர்கள் என்று தெரிந்துகொள்ள முடியாதபடி செய்யப்படுகிறதோ, அது போல ஆசிரியர்கள் எல்லாம் உட்கார வைக்கப்படுகிருர்கள். குறிப்பிட்ட பள்ளியினுடைய விடைத்தாள்களை 15, 15 விடைத்தாள்களாகக் கொண்டுபோய் திருத்துவதற்காகக் கொடுக்கிருர்கள். எந்த ஆசிரியருக்கு எந்தப் பள்ளியினுடைய விடைத்தாள்கள் வருகின்றன, இன்றைக்கு எந்தப் பள்ளியினுடையது வருகிறது என்று யாரும் சொல்ல முடியாது. ஆகவே அப்படிப்பட்ட குறைபாடு இல்லாமல், திருப்திகரமாக நடைபெறுகிறது. விரைவாக நடைபெறுகிறது. இன்னமும்கூட கிட்டத்தட்ட ஜூன் 1-ம் தேதி புகுமுக வகுப்புத் தேர்வு முடிவை வெளியிடுகிற அளவுக்கும் முயற்சி எடுக்கப்படுகிறது. ஒரு வார காலம் முன்னதாக, அதாவது மே மாதம் 21, 22 தேதியிலேயே வெளியிட வேண்டுமென்று முயற்சி செய்து கொண்டிருக்கிருேம். அதை இன்னும் முன்னதாக வெளியிட்டால், கல்லூரியிலே சேர்வதற்கு மாணவர்கள் பல்வேறு வகைகளிலே ஆயத்தப்படுத்திக்கொள்வதற்கு வசதி ஏற்படும். பத்து நாட்கள் அல்லது 15 நாட்கள் இடைவெளி கொடுப்பது நல்லது. ஆகவே மே 15-ம் தேதி கூட வெளியிடுகிற அளவுக்குச் செய்யலாம். அந்த அளவுக்குச் செய்வதற்கு இந்த ஆண்டு கம்ப்யூட்டர் போன்றவைகளைப் பயன்படுத்தலாமா என்ற முயற்சி இருந்துகொண்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்து அடுத்து ஆண்டிலிருந்து அந்த முறையை மேற்கொள்ளலாம்.

Mr. CHAIRMAN : Three questions have taken 20 minutes. Hon. Members should not put supplementaries again and again.

An Hon. MEMBER : That shows the importance of a particular question.

Mr. CHAIRMAN : The Hon. Members should not repeat the supplementaries on the same question. The time at the disposal of the House is precious.

Non-Educational Work.

*119 *Q.*—Thiru L. BALARAMAN (on behalf of Thiru V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether primary school teachers are being asked to do non-educational work ; and

(*b*) if so, the details thereof ?